**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.332/2022**

பி.**வா.சா.–3. பாண்டியராஜன் – , த/பெ.பால்பாண்டி**

**நாள். 17.02.2026**

பி.**வா.சா.3 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் நீதிமன்றத்திற்கு பிரதிவாதி வெங்கடேசன் சொல்லித்தான் வந்தேன். அழைப்பாணை எதுவும் வரவில்லை. நான் ஆனைமலை டொயேட்டில் பழைய வாகனனம் விற்பது சம்மந்தமாக பணிபுரிந்து வருகிறேன். பிரதிவாதியின் மனைவி காயத்திரி என் அலுவலகத்தில் தான் பணிபுரிகிறார். அவர்கள் வீட்டில் நடக்கும் நல்லது, கெட்ட நிகழ்வுகளில் நான் கலந்து கொள்வேன். பிரதிவாதி வெங்கடேசன் கடன் எதற்காக வாங்கினார் என்றால் வீடு வாங்குவதற்காக கடன் வாங்கினார். ஜூலை மாதம் 2020 தேதி எனக்கு தெரியாது. கிரையப்பத்திரம் எழுதும் போது நான் போகவில்லை. பிரதிவாதி 1330 சதுரடி கிரையம் வாங்கினார். 1330 சதுரடி என்பதை எதன் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் பிரதிவாதி சொல்லியதை வைத்து நான் சொல்கிறேன். பிரதிவாதி வெங்கடேசன் 19.09.2020 காயத்திரி பெயரில் ஒரு கிரையம் வாங்கியதாக சொல்வது எனக்கு தெரியும். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியள்ள சொத்தும் பி.வா.சா.ஆ.2 ல் உள்ள சொத்தும் ஒன்றுதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2. ஆவணம் பிரதிவாதியின் மனைவி காயத்திரிக்கு ஜீவமணி பவர் ஏஜன்ட் கோகுலகிருஷ்ணன் மூலமாக கிரையம் செய்ததாக எழுதிக் கொடுக்கப்பட்டது. கிரையத் தொகையாக ரூ.1,80,000/– போடப்பட்டுள்ளது. மேற்கண்ட கிரையத் தொகையான ரூ.1,80.000/– அன்றைய தினமே கொடுக்கப்பட்டதாக போடப்பட்டுள்ளது. ஆகவே நான் சொல்வது போல் மேற்படி கிரைய தொகைக்கு தாவா காசோலை கொடுக்கப்பட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் வழக்கிற்காக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி உண்மையில் அவர் தனிப்பட்ட முறையில் வாதியிடம் கடன் பெற்றதற்காகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி கடனை பெற்று விட்டு மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக வாதம் செய்கிறார் என்றாலும் நான் அவரின் நண்பர் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.17 21:29:08 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.